1979 மார்ச் 12]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

ஆம். இந்தப் பகுதியிலுள்ள மருதையாற்றின் நீர் உப்புத் தன்மை உள்ளதாக இருப்பதால் இதுபற்றி ஆராய ஒரு உயர் மட்டக் குழு அமைக்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இக் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை கிடைத்த பிறகுதான் இத்திட்டம் பரிசீலிக்கப்படும்.

மாரங்கியூர் பாசனக் கால்வாய்.

*வினா எண் 355—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம், மாரங்கியூர் பெண்ணையாற்று நீர் பாசனக் கால்வாய் (கிரேடுவால்) பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) அதனை முழுமையாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை. திட்டமிட்டபடி அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

சிதம்பரம் பால் வழங்கு யூனியன்.

*வினா எண் 356—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் சிதம்பரம் பால் வழங்கும் யூனியனில் 7 இலட்ச ரூபாய் நட்டம் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) நட்டம் வராமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?